# திருச்சிராப்பள்ளி மாநகராட்சி

**2019 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆம் நாள், திங்கள் கிழமை மாலை 4.00 மணியளவில் திருச்சிராப்பள்ளி மாநகராட்சி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களது அறையில் பின்வரும் பொருள்களைப் பற்றிக் கூட்டம் நடைபெறும்.**

## <u>நிகழ்ச்சி நிரல்</u>

**பொருள். 1**

அரசு தனது ஆணை எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.08.05.1998ல் உதவி செயற்பொறியர் நிலையில் 05 பணியிடங்களும் அதனைத் தொடர்ந்து அரசு தனது ஆணை (நிலை) எண்.74 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.02.06.2000ல் திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்கு உதவி செயற்பொறியாளர் (மின்சாரம்) நிலையில் இரண்டு பணியிடங்களை நிரந்தரமாக தொடர அனுமதித்தும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்படி இம்மாநகராட்சிக்கு உதவி செயற்பொறியாளர் நிலையில் மொத்தம் 07 பணியிடங்களை நிரந்தர அடிப்படையில் அனுமதித்து ஆணையிடப்பட்டுள்ளது.

மாநகராட்சி பொறியியல் மற்றும் குடிநீர் வழங்கல் பணி விதிகள் 1996ன் வகுப்பு – II நிலையிலான உதவி செயற்பொறியாளர் பணியிடத்தினை பூர்த்தி செய்து கொள்ள கீழ்கண்ட நியமன முறை மற்றும் தகுதிகள் வரையறை செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியிடத்தின் பெயர் | பணி விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள தகுதிகள் மற்றும் நிபந்தனைகள் |
|---|---|---|
| 1 | உதவி செயற்பொறியாளர் | உதவி பொறியாளர் / இளநிலை பொறியாளர் நிலைகளில் பணிபுரிந்து வருபவர்களை பதவி உயர்வு செய்து பணியமர்த்துதல்.<br>உதவிப்பொறியாளர் அல்லது இளநிலைப் பொறியாளராக மைய அலுவலக பொறியியல் பிரிவில் ஓராண்டுக்கு குறையாமலும், வார்டு அலுவலகங்களில் மூன்றாண்டுகளுக்கு குறையாமலும் பணிபுரிந்திருத்தல் வேண்டும். |

உதவிசெயற்பொறியர் நிலையிலான பணியிடங்கள் பூர்த்தி செய்வதற்கு உதவிப்பொறியர் மற்றும் இளநிலைப்பொறியர் ஆகிய நிலைகளில் பணிபுரிந்து வரும் பணியாளர்களின் ஒருங்கிணைப்பு பணிமூப்பின் அடிப்படையில் தகுதி மற்றும் திறன் பெற்றுள்ளவர்களை பதவி உயர்வு மூலம் பணி அமர்த்திட பணி விதிகளில் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மாநகராட்சி மைய அலுவலகத்திற்கென பிரத்யேகமாக உதவிப்பொறியாளர் / இளநிலைப் பொறியாளர் நிலையில் பணியிடம் ஏதும் அனுமதிக்கப்படவில்லை. எனவே மைய அலுவலகத்தில் ஒரு வருடம் பணிபுரியும் கேள்வி எழவில்லை.

இந்நிலையில் உதவி செயற்பொறியாளர் நிலையில் பணிபுரிந்து வந்த திரு.எஸ்.கண்ணன், என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.04.2019 அன்றும், திரு.டி. ரவீந்திரன், என்பவர் வயது முதிர்வின் காரணமாக 30.06.2019 அன்றும் ஓய்வு பெற்றுள்ளனர். எனவே, 01.05.2019 முதல் மற்றும்

**01.07.2019** முதல் உதவி செயற்பொறியாளர் நிலையில் இரண்டு பணியிடங்கள் காலியாக இருந்து வருகிறது.

உதவிப்பொறியர்/இளநிலைப்பொறியாளர்களின் ஒருங்கிணைப்பு பணிமூப்பின்படி திரு.சி. ரகுராமன், இளநிலைப் பொறியாளர் மற்றும் திரு.எ.ராஜேஸ்கண்ணா, இளநிலைப் பொறியாளர் ஆகியோர் உதவி செயற்பொறியாளர் நிலையிலான பணியிடத்திற்கு பரிசீலனை செய்யப்பட வேண்டியவர்கள் ஆவார். இவர்கள் இளநிலை பொறியாளர் நிலையில் **01.09.2006** முதல் நாளது தேதி வரை பணிபுரிந்து வருகின்றனர். இதன் வாயிலாக பொறியர் பிரிவின் பல்வேறு பணிகளில் கடந்த **12** ஆண்டுகளுக்கு மேல் பணிபுரிந்து போதிய தேர்ச்சி மற்றும் முன் அனுபவம் பெற்றுள்ளவராக இருந்து வருகின்றனர். மேலும், இவர்கள் மீது இன்றைய நாளில் மாநகராட்சி ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு விதி **8(2)**ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவை இல்லை. தவிர கடந்த **05** ஆண்டுகளில் இவர்கள் தண்டனை ஏதும் பெற்று இருக்கவில்லை. எனவே இவர்களை **01.05.2019** முதல் மற்றும் **01.07.2019** முதல் காலியாக இருந்து வரும் உதவி செயற்பொறியர் நிலையிலானப் பணியிடத்தில் மாமன்றத்தின் ஒப்புதலுடன் பதவி உயர்வு செய்து கொள்ளவும், இதற்கான அரசின் உறுதி ஆக்க ஆணையினை பெற தக்க கருத்துரு அரசுக்கு அனுப்பி வைக்கவும், உறுதி ஆக்க ஆணை பெறப்பட்ட பின்னர் உதவி செயற்பொறியாளர் நிலையிலானப் பணியிடத்திற்குரிய ஊதியம் நிர்ணயம் செய்து வழங்கவும் தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மேற்படி திரு.சி.ரகுராமன், இளநிலைப் பொறியாளர் மற்றும் திரு.எ.ராஜேஸ்கண்ணா, இளநிலைப் பொறியாளர் ஆகியோர் சுமார் **12** வருடங்கள் இளநிலை பொறியாளராக பணிபுரிந்து அதன் மூலம் பொறியர் பிரிவின் பல்வேறு பணிகளிலும் போதிய முன் அனுபவம் பெற்றுள்ளதன் அடிப்படையில், இவர்களை உதவி செயற்பொறியாளர் ஆக அரசின் உறுதியாக்க ஆணையினை முற்றிலும் எதிர்நோக்கி பதவி உயர்வு செய்து பணியமர்த்திட மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம். அரசின் உறுதியாக்க ஆணை பெறப்பட்டவுடன் உதவி செயற்பொறியாளர் நிலையிலான பணியிடத்திற்கு உரிய ஊதியம் விதிகளின் படி நிர்ணயம் செய்து வழங்க தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.
2. அரசின் உறுதி ஆக்க ஆணையினை பெற உரிய கருத்துருவினை அரசுக்கு, நகராட்சி நிர்வாக ஆணையர் வழியாக அனுப்பி வைக்கவும் தனி அலுவலர் ஒப்புதல் வழங்கலாம்.

**(சி1/8711/2017/மையம்)**

**தீர்மானம் எண்.263 (பொருள்– 1) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 2**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2018-19ன் கீழ், கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.54/2019-20ன் வாயிலாக 25.06.2019 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனிஅலவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரா்கள் பற்றிய விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| **பொது நிதி 2018-19** | | | |
| 1 | இம்மாநகராட்சி தலைமை நீர்ப்பணி நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளை கிணறுகளுக்கு தேவையான 25 குதிரை திறன் கொண்ட மின்மோட்டார்கள் 10 எண்கள் வாங்கிக் கொள்ளும் பணி<br><br>மதிப்பீடு ரூ.18.00 லட்சம் | **1) திரு.ஜிஜி.சக்திவேல், திருச்சி 12.00 % அதிகம்**<br><br>(பேச்சு வார்த்தைக்குப் பின் மதிப்பீட்டை காட்டிலும் 4.75 சதவீதம் அதிகம்)<br><br>2) திரு. சி.தனபால், திருச்சி 12.95 % அதிகம் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.ஜிசக்திவேல்,, திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **12.00 சதவீதம் கூடுதல்** விலை விகிதத்தில் கொடுத் திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த சதவிகிதத்தை குறைத்து தரக் கோரியதில் மேற்படி ஒப்பந்ததாரா் தனது 28.06.2019ம் தேதிய கடிதத்தில், மதிப்பீட்டைக் காட்டிலும் 4.75 சதவிகிதம் கூடுதலான விலை விகிதத்தில் பணியினை செய்து தருவதாக கொடுத்துள்ளாா். இப்பணி வறட்சி நிவாரணத்தின் கீழ் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட கூடுதல் ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டுள்ள அலுவலகக் குறிப்பில் கூறியுள்ளதை முன்னிட்டு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

**1)** அரசாணை எண்.**34**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**22.03.2006**ல் தெரிவித்துள்ளவாறு மதிப்பீட்டைக் காட்டிலும் **5** சதவீதத்திற்குள் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றால், அது முதன் முறையாக வரவழைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியாக இருந்தாலும் அவசர அவசியப் பணியாக இருப்பின் மாமன்றம் பரிசீலித்து ஒப்புதல் அளிக்கலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் சுற்றறிக்கை எண்.672/2006/WB3, நாள். 03.04.2006ன் வாயிலாக தெரிவித்துள்ளதை ஏற்று, மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு கலம் எண் **5**ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**2)** மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளை மேற்கொள்வதால், அனுமதிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையினை விட Excess Tender காரணமாக ஏற்படும் கூடுதலாக ஏற்படும் செலவினத்தை 2019-20ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் **குடிநீர் நிதி – குடிநீர் விநியோகம் –இதர பணிகள் (3138)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள ரூ.125.00 லட்சத்திலிருந்து பணிகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ4/1481/2019(மையம்)**

**தீர்மானம் எண்.264 (பொருள்– 2) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 3**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2018-19ன் கீழ், கீழ்கண்ட பணியினை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.55/2019-20ன் வாயிலாக 25.06.2019 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனிஅலவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரர்கள் பற்றிய விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| பொது நிதி 2018-19 | | | |
| 1 | தலைமை நீர்ப்பணி நிலையம் கம்பரசம் பேட்டை தலைமை நீர்ப்பணி நிலையத்தில் புதிதாக 5 எண்ணிக்கை 250 எம்.எம். விட்டமுள்ள ஆழ்துளை கிணறு அமைத்து கொடுக்கும் பணி<br><br>மதிப்பீடு ரூ.58.90 லட்சம் | 1) **மெசர்ஸ்.ஜி ஆர் & சன்ஸ், திருச்சி** **9.95 % அதிகம்** (பேச்சு வார்த்தைக்குப் பின் மதிப்பீட்டை காட்டிலும் 4.75 சதவீதம் அதிகம்)<br><br>2) திரு. ஏ.ஜி.இளமயிலன், திருச்சி 14.96 % அதிகம் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **மெசர்ஸ்.ஜி ஆர் & சன்ஸ்., திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **9.95 சதவீதம் கூடுதல்** விலைவிகிதத்தில் கொடுத்திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த சதவிகிதத்தை குறைத்து தரக் கோரியதில் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 28.06.2019ம் தேதிய கடிதத்தில், மதிப்பீட்டைக் காட்டிலும் 4.75 சதவிகிதம் கூடுதலான விலைவிகிதத்தில் பணியினை செய்து தருவதாக கொடுத்துள்ளார். இப்பணி வறட்சி நிவாரணத்தின் கீழ் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட கூடுதல் ஒப்பந்தப்புள்ளியினை கீழ்கண்டுள்ளஅலுவலகக் குறிப்பில் கூறியுள்ளதை முன்னிட்டு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

**1)** அரசாணை எண்.**34**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**22.03.2006**ல் தெரிவித்துள்ளவாறு மதிப்பீட்டைக்காட்டிலும் **5** சதவீதத்திற்குள் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வரப் பெற்றால், அது முதன் முறையாக வரவழைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியாக இருந்தாலும் அவசர அவசியப் பணியாக இருப்பின் மாமன்றம் பரிசீலித்து ஒப்புதல் அளிக்கலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் சுற்றறிக்கை எண். **672/2006**/WB3, நாள்.**03.04.2006**ன் வாயிலாக தெரிவித்துள்ளதை ஏற்று, மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிக்கு பத்தி எண் **5**ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**2)** மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளை மேற்கொள்வதால், அனுமதிக்கப் பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையினை விட Excess Tender காரணமாக ஏற்படும் கூடுதலாக ஏற்படும் செலவினத்தை 2019-20ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் **குடிநீர் நிதி – குடிநீர் விநியோகம்–இதர பணிகள் (3138)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள ரூ.125.00 லட்சத்திலிருந்து பணிகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ4/1481/2019(மையம்)**

**தீர்மானம் எண்.265 (பொருள்– 3) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 4**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி பொதுநிதி 2018-19ன் கீழ், கீழ்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிக்கை எண்.16/2019-20ன் வாயிலாக 18.06.2019 அன்று முதன் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள கீழ்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிசீலித்து வழங்கியுள்ள பரிந்துரைகள் தனிஅலவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மற்றும் ஒப்பந்ததாரா்கள் பற்றிய விபரம் | குறிப்பு |
|---|---|---|---|
| **1** | **2** | **3** | **4** |
| **பொது நிதி 2018-19** | | | |
| 1 | பொன்மலைக் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணற்றுடன் கூடிய கையடிக் குழாய்கள் மற்றும் பவர் பம்புகளை பராமரிப்பு மற்றும் மராமத்து செய்து கொடுக்கும் பணி<br><br>மதிப்பீடு ரூ.7.80 லட்சம்<br>**இ4/2206/19** | **1) திரு. எம் .ரஷீத்சிராஜ், திருச்சி 14.06 % அதிகம்**<br><br>(பேச்சு வார்த்தைக்குப் பின் மதிப்பீட்டை காட்டிலும் 4.75 சதவீதம் அதிகம்)<br><br>2) திரு. டி.கோபால கிருஷ்ணன், திருச்சி 16.03 % அதிகம் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. எம் .ரஷீத் சிராஜ், திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **14.06 சதவீதம் கூடுதல்** விலைவிகிதத்தில் கொடுத் திருப்பதால், ஒப்பந்தக்கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த சதவிகிதத்தை குறைத்து தரக் கோரியதில் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 24.06.2019ம் தேதிய கடிதத்தில், மதிப்பீட்டைக்காட்டிலும் 4.75 சதவிகிதம் கூடுதலான விலை விகிதத்தில் பணியினை செய்து தருவதாக கொடுத்துள்ளார். இப்பணி வறட்சி நிவாரணத்தின் கீழ் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட கூடுதல் ஒப்பந்தப் புள்ளியினை கீழ்கண்டுள்ள அலுவலகக் குறிப்பில் கூறியுள்ளதை முன்னிட்டு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 2 | கோ–அபிஷேகபுரம் கோட்டத்திற்குட் பட்ட வார்டு எண்.**40,41,50, 51, 54,55,57, 60**க்குட்பட்ட பகுதிகளில் உள்ள மினி பவர் பம்புகளை பராமரிப்பு மற்றும் மராமத்து செய்து கொடுக்கும் பணி<br><br>மதிப்பீடு ரூ.7.80 லட்சம்<br>**இ4/2207/19** | **1) திரு. எஸ்.பெரியசாமி, திருச்சி 11.97 % அதிகம்**<br>(பேச்சு வார்த்தைக்குப் பின் மதிப்பீட்டை காட்டிலும் 4.70 சதவீதம் அதிகம்)<br><br>2) திரு.பி.ஜெயலெட்சுமி, திருச்சி 14.26 % அதிகம் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. எஸ். பெரியசாமி, திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **11.97 சதவீதம் கூடுதல்** விலை விகிதத்தில் கொடுத் திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த சதவிகிதத்தை குறைத்து தரக் கோரியதில் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 24.06.2019ம் தேதிய கடிதத்தில், மதிப்பீட்டைக் காட்டிலும் 4.70 சதவிகிதம் கூடுதலான விலை விகிதத்தில் பணியினை செய்து தருவதாக கொடுத்துள்ளார். இப்பணி வறட்சி நிவாரணத்தின் கீழ் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட கூடுதல் ஒப்பந்தப் புள்ளியினை கீழ்கண்டுள்ள அலுவலகக் குறிப்பில் கூறியுள்ளதை முன்னிட்டு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| 3 | கோ–அபிஷேகபுரம் கோட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்து கொடுக்கும் பணி<br><br>மதிப்பீடு ரூ.7.50 லட்சம்<br>**இ4/2208/19** | **1) திரு. டி.தங்கராஜ், திருச்சி<br>4.60% அதிகம்**<br><br>2) திரு. டி.ராமநாதன், திருச்சி<br>6.22 % அதிகம் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. டி.தங்கராஜ், திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **4.60 சதவீதம் கூடுதல்** விலை விகிதத்தில் கொடுத்திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த சதவிகிதத்தை குறைத்து தரக் கோரியதில் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 24.06.2019ம் தேதிய கடிதத்தில், தற்போது கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தால் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.60 சதவிகிதம் கூடுதலான விலை விகிதத்தில் பணியினை செய்ய இயலும் என தெரிவித்துள்ளார். இப்பணி வறட்சி நிவாரணத்தின் கீழ் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட கூடுதல் ஒப்பந்தப் புள்ளியினை கீழ்கண்டுள்ளஅலுவலகக் குறிப்பில் கூறியுள்ளதை முன்னிட்டு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத் துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 4 | வார்டு எண்.14, 33க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய பிவிசி தொட்டி அமைத்தல் மற்றும் வார்டு எண்.15, 23, 27க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய கையடிக் குழாய்கள் வழங்கி பொருத்தி இயக்கி கொடுக்கும் பணி<br>மதிப்பீடு ரூ.7.50 லட்சம்<br>**இ4/2205/19** | **1) திரு. எஸ்.வீராச்சாமி, திருச்சி<br>12.27 % அதிகம்**<br><br>(பேச்சு வார்த்தைக்குப் பின் மதிப்பீட்டை காட்டிலும் 4.70 சதவீதம் அதிகம்)<br><br>2) திரு.எம்.சுப்ரமணியன்,திருச்சி<br>16.46 % அதிகம் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு.எஸ். வீராச்சாமி , திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **12.27 சதவீதம் கூடுதல்** விலைவிகிதத்தில் கொடுத் திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்த தாரரிடம் ஒப்பந்த சதவிகிதத்தை குறைத்து தரக் கோரியதில் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 24.06.2019ம் தேதிய கடிதத்தில், மதிப்பீட்டைக் காட்டிலும் 4.70 சதவிகிதம் கூடுதலான விலை விகிதத்தில் பணியினை செய்து தருவதாக கொடுத்துள்ளார். இப்பணி வறட்சி நிவாரணத்தின் கீழ் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட கூடுதல் ஒப்பந்தப் புள்ளியினை கீழ்கண்டுள்ள அலுவலகக் குறிப்பில் கூறியுள்ளதை முன்னிட்டு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 5 | அரியமங்கலம் கோட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்து கொடுக்கும் பணி<br><br>மதிப்பீடு ரூ.7.20 லட்சம்<br>**இ4/2204/19** | **1) திருமதி.பி.ஜெயலெட்சுமி, திருச்சி<br>11.99 % அதிகம்**<br>(பேச்சு வார்த்தைக்குப் பின் மதிப்பீட்டை காட்டிலும் 4.65 சதவீதம் அதிகம்)<br><br>2) திரு. எஸ்.கோவிந்தராஜ், திருச்சி<br>16.90 % அதிகம் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **திருமதி.பி.ஜெயலெட்சுமி, திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **11.99 சதவீதம் கூடுதல்** விலைவிகிதத்தில் கொடுத் திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த சதவிகிதத்தை குறைத்து தரக்கோரியதில் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 24.06.2019ம் தேதிய கடிதத்தில், மதிப்பீட்டைக் காட்டிலும் 4.65 சதவிகிதம் கூடுதலான விலை விகிதத்தில் பணியினை செய்து தருவதாக கொடுத்துள்ளார். இப்பணி வறட்சி |

| | | | |
|---|---|---|---|
| | | | நிவாரணத்தின் கீழ் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட கூடுதல் ஒப்பந்தப் புள்ளியினை கீழ்கண்டுள்ள அலுவலகக் குறிப்பில் கூறியுள்ளதை முன்னிட்டு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 6 | வார்டு எண்.1,3,5, 17க்குட்பட்ட பகுதிகளில் ஆழ்துளை கிணற்றுடன் கூடிய பிவிசி தொட்டி அமைத்து கொடுக்கும் பணி<br><br>மதிப்பீடு ரூ.7.50 லட்சம்<br>**இ4/5304/ 19** | **1) திரு.ஆர். விஸ்வநாதன், திருச்சி 4.61 % அதிகம்**<br><br>2) திரு. சி.பட்டாபிராமன், திருச்சி 6.36 % அதிகம் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் **திரு. ஆர்.விஸ்வநாதன், திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **4.61 சதவீதம் கூடுதல்** விலை விகிதத்தில் கொடுத்திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் ஒப்பந்த சதவிகிதத்தை குறைத்து தரக் கோரியதில் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 24.06.2019ம் தேதிய கடிதத்தில், தற்போது கட்டுமானப் பொருட்களின் விலையேற்றத்தால் மதிப்பீட்டைக் காட்டிலும் 4.60 சதவிகிதம் கூடுதலான விலைவிகிதத்தில் பணியினை செய்ய இயலும் என தெரிவித்துள்ளார். இப்பணி வறட்சி நிவாரணத்தின் கீழ் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட கூடுதல் ஒப்பந்தப் புள்ளியினை கீழ்கண்டுள்ள அலுவலகக் குறிப்பில் கூறியுள்ளதை முன்னிட்டு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |
| 7 | ஸ்ரீரங்கம் கோட்ட பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்து கொடுக்கும் பணி<br><br>மதிப்பீடு ரூ.7.50 லட்சம்<br><br>**இ4/5308/19** | **1) திரு. டி.தங்கராஜ், திருச்சி 5.06 % அதிகம்**<br>(பேச்சு வார்த்தைக்குப் பின் மதிப்பீட்டை காட்டிலும் 4.75 சதவீதம் அதிகம்)<br><br>2) திரு. டி.ராமநாதன், திருச்சி 6.03 % அதிகம் | வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப் புள்ளிகளில் **திரு.டி. தங்கராஜ், திருச்சி** அவர்கள் மதிப்பீட்டைக் காட்டிலும் **5.06 சதவீதம் கூடுதல்** விலைவிகிதத்தில் கொடுத் திருப்பதால், ஒப்பந்தக் கூர்ந்தாய்வுக் குழுவின் பரிந்துரையின்படி மேற்கண்ட ஒப்பந்த தாரரிடம் ஒப்பந்த சதவிகிதத்தை குறைத்து தரக் கோரியதில் மேற்படி ஒப்பந்ததாரர் தனது 24.06.2019ம் தேதிய கடிதத்தில், மதிப்பீட்டைக் காட்டிலும் 4.75 சதவிகிதம் கூடுதலான விலைவிகிதத்தில் பணியினை செய்து தருவதாக கொடுத்துள்ளார். இப்பணி வறட்சி நிவாரணத்தின் கீழ் உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேற்கண்ட கூடுதல் ஒப்பந்தப்புள்ளியினை |

| | | | |
|---|---|---|---|
| | | | கீழ்கண்டுள்ள அலுவலகக் குறிப்பில் கூறியுள்ளதை முன்னிட்டு ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம். |

**அலுவலகக் குறிப்பு :**

**1)** அரசாணை எண்.**34**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.**22.03.2006**ல் தெரிவித்துள்ளவாறு மதிப்பீட்டைக்காட்டிலும் **5** சதவீதத்திற்குள் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி வரப் பெற்றால், அது முதன் முறையாக வரவழைக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளியாக இருந்தாலும் அவசர அவசியப் பணியாக இருப்பின் மாமன்றம் பரிசீலித்து ஒப்புதல் அளிக்கலாம் என நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை, அவர்களின் சுற்றறிக்கை எண். **672/2006**/WB**3**, நாள்.**03.04.2006**ன் வாயிலாக தெரிவித்துள்ளதை ஏற்று, மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளுக்கு பத்தி எண் **5**ல் குறைந்த ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்கலாம் என ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வு குழு பரிந்துரைத்துள்ளதை ஏற்று ஒப்புதல் அளிக்கலாம்.

**2)** மேற்கண்ட அட்டவணையில் கண்டுள்ள பணிகளை மேற்கொள்வதால், அனுமதிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகையினை விட Excess Tender காரணமாக ஏற்படும் கூடுதலாக ஏற்படும் செலவினத்தை 2019-20ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் **குடிநீர் நிதி – குடிநீர் விநியோகம் –இதர பணிகள் (3138)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ள ரூ.125.00 லட்சத்திலிருந்து பணிகளை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ4/2206/2019(மையம்)**

**தீர்மானம் எண்.266 (பொருள்– 4) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 5**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் 2019 யொட்டி அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் 23க்குட்பட்ட அரியமங்கலம் கோட்ட அலுவலகத்தில் வாக்குச்சாவடிக்கு தேவையான வாக்கு இயந்திரங்கள் மற்றும் உபகரணங்கள் பாதுகாப்பாக வைப்பதற்கு ஏதுவாக சவுக்கு தடுப்புகள் அமைக்கவும், ஒலிபெருக்கிகள், மின்விளக்குகள் மற்றும் சாமியானா பந்தல் போன்ற பணிகளை தேர்தல் நடைபெறும் நாளிலிருந்து **10** தினங்களுக்கு முன்பாக மேற்கொள்ள வேண்டியிருந்தது. எனவே, இப்பணியினை மேற்கொள்ள ரூ.2.20 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.36 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.மாமுண்டி, திருச்சி என்பவர் மூலம் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ3/3065/19)**

**தீர்மானம் எண்.267 (பொருள்– 5) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 6**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் 2019 யொட்டி அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் 22, 23, 24 மற்றும் 26க்குட்பட்ட 4 வார்டுகளில் உள்ள வாக்குச் சாவடிகளில் வாக்காளர்கள் வரிசையில் நின்று வாக்களிக்க ஏதுவாக சவுக்கு தடுப்புகள் மற்றும் சாய்வு மேடைகள் அமைத்தல், ஜெனரேட்டர் வசதிகள், பிளக்பாயிண்ட்,

மின்விசிறி, எமர்ஜென்சி விளக்கு, கம்ப்யூட்டர் பிளக்பாயிண்ட், டம்ளர், குவளை, குடிநீர் 20 லி, பிளாஸ்டிக் சேர் மற்றும் மேசை, நாற்காலிகள், சவுக்கு தடுப்புகள், இரும்பு தகட்டிலான தடுப்புகள், ஜக்குகள் மற்றும் தகர அடைப்புகள் போன்றவை வாடகை அடிப்படையில் செய்து கொடுக்கும் பணிகளை அவசியம் மேற்கொள்ள வேண்டியுள்ளது. எனவே, இப்பணிக்கு ஆகும் மொத்தச் செலவினம் ரூ.4.00 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.89 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.மரியபிரகாஷ்ராஜா, திருச்சி என்பவர் மூலம் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ3/3064/19)**

**தீர்மானம் எண்.268 (பொருள்– 6) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 7**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் நடைபெற்ற பாராளுமன்ற உறுப்பினர் தேர்தல் 2019 க்காக அரியமங்கலம் கோட்டம் வார்டு எண் 26க்குட்பட்ட காஜா பேட்டை மாநகராட்சி தொடக்கப்பள்ளியில் மாதிரி வாக்குச்சாவடி அமைக்கும் பணியினை மேற்கொள்ளுமாறு மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுரை வழங்கப்பட்டது. அதனடிப்படையில், மேற்படி பகுதியில் மாதிரி வாக்குச்சாடி அமைக்கும் பணியினை மேற்கொள்ள ரூ.2.50 லட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, மேற்படி பணியினை மதிப்பீட்டினைக் காட்டிலும் 0.15 சதவீதம் குறைவான விலை விகிதத்தில் ஒப்பந்ததாரர் திரு.ஆர்.மரியபிரகாஷ் ராஜா, திருச்சி என்பவர் மூலம் அவசர அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன் கருதியும் 1994ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளி மாநகராட்சி சட்டம் பிரிவு 15ன் கீழ் மேற்கொள்ளப்பட்டதை தனிஅலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது .

**அலுவலக குறிப்பு :**

பார்வையிட்டு பதிவு செய்யலாம்.

**(இ3/3333/19)**

**தீர்மானம் எண்.269 (பொருள்– 7) : பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள். 8**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டம், புத்தூர் பிரிவிற்குட்பட்ட, வார்டு எண்:52 க்குட்பட்ட, குமரன் நகர் 1வது மெயின் ரோடு குறுக்கு தெருக்களில் உள்ள தார்சாலை மிகவும் பழுதடைந்துள்ளதால் குண்டும், குழியுமாக இருப்பதினை தொடர்ந்து மழைகாலங்களில், மழை நீர் ஆங்காங்கே தேங்கியுள்ளதால் பொது மக்கள் பயணம் செய்வதற்கும், தேக்கமடையும் மழைநீரினால் சுற்றியுள்ள மக்களுக்கு சுகாதாரகேடு ஏற்பட வாய்ப்புள்ளதால், மேற்கண்ட சாலையினை மைய சுடு கலவை பேவர் இயந்திரம் மூலம் தார் சாலை மேம்படுத்துவது மிகவும் அவசியமாகும். இப்பணியை மேற்கொள்ள மதிப்பீடு ரூ.**35.50** இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.**35.50** இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2019–20ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் பழைய தார்சாலைகளை மேம்படுத்துதல் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ.900.00 லட்சம் (4103004),** இப்பணியை செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/4926/2019(மையம்)**

**தீர்மானம் எண்.270 (பொருள்– 8) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 9**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.40க்குட்பட்ட ஆலங்குளம் மற்றும் மேலத்தெருவில் சாலை வசதி இல்லாததால் அப்பகுதி பொதுமக்கள் சிரமபடுகின்றனர். அப்பகுதி மக்களின் நலன் கருதி ஆலங்குளம் மற்றும் மேலத்தெருவில் மழைநீர் வடிகால், சிறுபாலம் மற்றும் சிமெண்ட் கான்கீரீட் தளம் அமைப்பதற்கு மதிப்பீடு ரூ.51.70 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்து நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், முடிவிற்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.51.70 லட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2019–20 ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் மழை நீர் வடிகால் என்ற தலைப்பின் கீழ் **மழை நீர் வடிகால் புதிதாக கட்டுதல் / மேம்படுத்துதல் மற்றும் நடைபாதையுடன் கூடிய மழைநீர்வடிகால் அமைத்தல் (3105)** தலைப்பின் கீழ் இப்பணிக்கான செலவினத்தை மேற்கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/4636/2019(மையம்)**

**தீர்மானம் எண்.271 (பொருள்– 9) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 10**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ–அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.60க்குட்பட்ட, லிங்கம் நகர் பகுதிகள் யாவும் வளர்ச்சியடைந்த மனைப்பிரிவுகள் ஆகும். அப்பகுதியில் மழைக்காலங்களில் அதிகம் தண்ணீர் தேங்கி நிற்கிற பகுதியாகும். எனவே அப்பகுதியில் உள்ள தார்சாலைகள் மிக விரைவாக பழுதடைந்து விடுகிறது. ஆகையால் பொதுமக்கள் நலன் கருதி லிங்கம் நகர் கிழக்குப் பகுதியில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைக்க மதிப்பீடு ரூ.51.50 இலட்சத்திற்கு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.51.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. 2019-20ம் ஆண்டின் திருத்திய வரவு செலவுத்திட்டத்தில் **சிமெண்ட் கான்கிரீட் சாலை அமைத்தல் \ பழைய சிமெண்ட் கான்கிரீட் தளத்தை மேம்படுத்துதல் மற்றும் இதரப்பணிகள் (4103003)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/4796/2019(மையம்)**

**தீர்மானம் எண்.272 (பொருள்– 10) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 11**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்: 59க்குட்பட்ட மேட்டுத் தெருவில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான பி.டி.ராஜன் நினைவு பூங்கா வடக்கு பகுதியில் விளையாட்டு உபகரணங்கள், யோகா கூடம், உடற்பயிற்சி சாதனங்கள், குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் அமைக்கும் பணி மற்றும் பழுதடைந்த கழிவறை புதுப்பித்தல், புதிதாக நடைபாதையில் பேவர் பிளாக் அமைத்தல், விலங்கு உருவம் கொண்ட குப்பைத்தொட்டி அமைத்தல், கொரியன் புற்கள், செடிகள், மின் வசதி, தண்ணீர் வசதி, கிரானைட் பென்ச் மற்றும் இதர பணிகள் மேற்கொள்ள ரூ.58.10 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலர் மற்றும் ஆணையர் அவர்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.58.10 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
2. **2019 – 20ம்** ஆண்டின் திருத்திய வரவு செலவுத்திட்டத்தில் **புதிய பூங்காக்கள் உருவாக்குதல் மற்றும் பழைய பூங்காக்களில் அபிவிருத்தி பணிகள் மேற்கொள்ளுதல் (3102)** என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப்பட்டுள்ள நிதியிலிருந்து இப்பணியை செய்து கொள்ள அனுமதி அளிக்கலாம்.

**இ2/1622/2019(மையம்)**

**தீர்மானம் எண்.273 (பொருள்– 11) : அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதி அளிக்கப்பட்டது.**

**பொருள். 12**

திருச்சிராப்பள்ளி மாநகராட்சி, கோ–அபிஷேகபுரம் கோட்டம், வார்டு எண்.58க்குட்பட்ட உறையூர் பஞ்சவா்ணசாமி கோவில் தெருவில் அமைந்துள்ள பஞ்சவா்ணசுவாமி ஆலயம் மிகவும் பிரசித்த பெற்ற ஆலயமாகும். அப்பகுதியிலுள்ள தார்சாலை பழுதடைந்தும் மழைநீா் வடிக்கால் பழுதடைந்தும் உள்ளது. எனவே பொதுமக்கள் மற்றும் பக்தா்கள் நலன் கருதி உறையூா் பஞ்சவா்ணசாமி கோவில் தெருவில் நடைபாதையுடன் கூடிய மழைநீா் வடிகால் அமைத்து, மைய சுடு கலவை பேவா் இயந்திரம் மூலம் தார்தளம் அமைக்கும் பணி, மேற்கொள்ள ரூ.91.20 இலட்சத்திற்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு நிர்வாக அனுமதி கோரி தனி அலுவலா் மற்றும் ஆணையா் அவா்களின் பார்வைக்கும், அனுமதிக்கும் பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு.**

1. மதிப்பீட்டுத் தொகை ரூ.91.20 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி அளிக்கலாம்.
